


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதையொட்டி, கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கொள்கைப் பரப்புச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழகம் அறிவிக்கிற வேட்பாளர்களை விருப்பு – வெறுப்பின்றி கடுமையாக உழைத்து

# வெற்றிக்கனியை தலைவரின் கரங்களில் ஒப்படைக்க உறுதி ஏற்போம்!

## சென்னை கிழக்கு மாவட்ட தீர்மானம்! மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு அறிவிப்பு!



சென்னை,மார்ச்.18-

சென்னை கிழக்கு மாவட்டக்கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 17.03.2026 செவ்வாய்க்கிழமை, மாலை சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டிமஹாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர்.பிரியாராஜன் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம்கவி, ஜோசப்சாமுவேல், அ.வெற்றி அழகன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், வே.உமாகாந்தன், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், புனிதவதிஎத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன், கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், MTR நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். தொகுதி பார்வையாளர்கள்: என்.கிருஷ்ணமூர்த்தி, இரா.நரேந்திரன், பி.முனியாண்டி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, பி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலாதேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, நந்தீஸ்வரன், சுரேஷ். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், க.வினோத், எஸ்.தனசேகர், ஜெ.பாலமுருகன், ஜி.ஜெ.பிரபு, ரஞ்சித்விஜயாலயன், L.P.F.மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், P.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் ம.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**தீர்மானம் 1:**

சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி வீனஸ் பகுதியில் உள்ள எவர்வின் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்திலும், சென்னை டான் பாஸ்கோ வள்ளி வளாகத்தில் அனிதா பயிற்சி பள்ளி மாணவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலும் கலந்து கொண்டு சிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும்..

துறைமுகம் சட்டமன்ற தொகுதி சென்னை பிராட்வே டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற தயாளு அம்மாள் பயிற்சி பள்ளியின் எட்டாம் ஆண்டு துவக்க விழா விலும்,

அதனை தொடர்ந்து டவுட்டன் பகுதியில் நடைபெற்ற துறைமுகம், எழும்பூர், திருவிக நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளின் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 2:**

கலைஞர் அரங்கல் நடைபெற்ற கூட்டத்தில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தபடி, சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பாகங்களிலும் பாகவாரியாக வாக்காளர் பட்டியலை சரிபார்த்து, குடும்பங்கள் வாரியாக பிரித்து, கைப்பேசி எண்ணுடன் அவர்களை எளிதில் தொடர்பு கொள்ளும் வகையில் கொடுக்கப்பட்டுள்ள மஞ்சள் நோட்டில் குறிக்கும் பணியை ஒரு வாரத்தில் செய்து முடிக்க இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 3:**

முதலமைச்சர் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் கூறியதற்கேற்ப 23/04/2026ல் நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் தலைமை அறிவிக்கின்ற வேட்பாளர்களை எந்த ஒரு விருப்பு வெறுப்பு இன்றி காலம் நேரம் பார்க்காமல் உழைத்து வெற்றி பெறச் செய்து கழகத் தலைவர் திருக்கரங்களின் ஒப்படைக்க உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 4:**

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி, 70வது வட்ட கழகச் செயலாளர் பா.அன்பரசு மறைவெய்ததற்கும்,

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி ம.அசோக்குமார் அவர்களின் தாயார் ம.தமிழ்செல்வி இயற்கை எய்தியதற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தும், அவர்களை இழந்து வாடும் அன்னார்களது குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்தும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றி யது.




நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாங்குநேரி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாங்குநேரி அழகு மகாலில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை ராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜோசப் பெல்சி தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் முன்னாள் எம்.பி.க்கள் ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ., அய்யப்பன், கழக நிர்வாகிகள் ஜார்ஜ் கோசல், ஹரி கிருஷ்ணன், சந்திரகலா, சித்திக், போர்வல் கணேசன், வேலங்குளம் கண்ணன், ராஜன், சுடலைக்கண்ணு, செல்வ கருணாநிதி, ராஜாஞான திரவியம், மணி சூரியன், பரமசிவ அய்யப்பன், கனகராஜ், சாந்தி சுபாஷ், முருகையா பாண்டியன், சேதுராமலிங்கம், அழகுமுத்து உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கடந்த 5 ஆண்டுகளில் தமிழுக்காக

# ஒன்றிய அரசு செலவு செய்த தொகை எவ்வளவு?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி,மார்ச்.18-

**சர்வதேச அளவில் தமிழ் மொழி ஆய்வை விரிவுபடுத்துவதற்கும், ஆவணக் காப்பகங்களை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்றும் தமிழ் ஆராய்ச்சிக்காக உலக மாநாடுகள் நடத்த வழங்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன என்றும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.**



அதன் விவரங்கள் பின்வருமாறு:

கடந்த ஐந்து ஆண்டுகளில், செம்மொழி தமிழின் வளர்ச்சிக்காகவும், ஆராய்ச்சிக்காகவும், உலகம் முழுவதும் பரப்பவும் ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு? இதே விவரங்களை மற்ற செம்மொழிகளுக்கும், ஆண்டு மற்றும் திட்டம் வாரியாக தர முடியுமா?

மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் (CICT) மற்றும் பிற நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி செய்ய, ஓலைச் சுவடிகளை டிஜிட்டல் மயமாக்க, மொழிபெயர்ப்பு திட்டங்கள், ஆய்வு தவிகள் மற்றும் தமிழ் ஆய்வு பற்றிய உலக மாநாடுகள் நடத்துவதற்காக வழங்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

செம்மொழித் தமிழில் கல்விசார் ஆராய்ச்சி, புத்தக வெளியீடுகள், உலகளவில் பரவலாக்கல் மற்றும் உயர் கல்வி ஆகியவற்றை, இந்நிதிகள் எவ்விதம் வலுப்படுத்தியுள்ளன என்பதை மதிப்பீடு செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

சர்வதேச அளவில் தமிழ் மொழி ஆய்வை விரிவுபடுத்துவதற்கும் ஆவணக் காப்பகங்களை உருவாக்குவதற்கும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

தமிழின் செம்மொழிப் பாரம்பரியத்தின் தொடர் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அதற்கானநிதி உதவியையும் அதிகரிக்கநிறுவன சுயாட்சியையும் ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சென்னையில் திருமண மண்டபம் – கூட்ட அரங்க உரிமையாளர்கள் உள்ளிட்டோருக்கு

# தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

சென்னை,மார்ச்.18-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளர்கள், நகை அடகு தொழில் செய்வோருக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப. தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நேற்று (17.03.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**நகை அடகு தொழில் செய்வோருக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் :**

இக்கூட்டத்தில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026க்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வரப்பெற்ற நிலையில், பொதுக்கூட்டம் / விழாக்கள் போன்ற நிகழ்வுகளின்போது வாக்காளர்களுக்கு மறைமுகமாக அடகு வைத்த நகைகளை திருப்புவதற்கு டோக்கன், அடையாள வில்லைகள் மற்றும் இதர வகைகளை கையாண்டு வருவதை எந்த ஒரு உரிமையாளரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. மீறினால் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அடகு வைக்கபட்டுள்ள நகைகள் வேட்பாளர்கள்/முகவர்களால் மொத்தமாக மீளத் திருப்பப்பட்டு வாக்காளர்களுக்கு திருப்பி வழங்கப்படுவதை தவிர்க்க வேண்டும். மொத்தமாக நகை அடகு நகைகளை திருப்ப எவரேனும் முற்படின் அல்லது சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு நேரில் வந்தாலோ மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ரிப்பன் கட்டட வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு 18004257012 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் போது அடகு வைக்கப்படும் நகைகள் சந்தேகத்திற்கிடமான வகையில் மீளத் திருப்பப்படும்போது, அவை குறித்த விவரங்களை உடனடியாக அருகாமையிலுள்ள தேர்தல் நடத்தும் அலுவலரைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையகத்தின் விதிமுறைகளை மீறிச் செயல்படுவது கண்டறியப்பட்டால் உடனடியாக உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மேற்கண்ட நிகழ்வுகள் / செயல்பாடுகள் தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு எதிரானதாகும்.

மேற்சொன்ன விதிமுறைகளின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை நேர்மையாகவும், சுமூகமாகவும் நடைபெற மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளர்களுக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் :

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்து திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளரும் வெளியூரிலிருந்து கூட்டமாக வந்து தங்குவதற்கு அனுமதி வழங்கக் கூடாது. திருமணக்கூடம் மற்றும் கூட்ட அரங்கில் திருமணம் மற்றும் சுபநிகழ்வுகள் தவிர வேறு எவ்வித அரசியல் தொடர்புடைய கூட்டங்கள் நடைபெற பதிவு செய்யப்பட்டாலும், அதன் விவரத்தினை முன்கூட்டியே தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.

சுபநிகழ்வுகள் என்ற பெயரில் மக்களைக் கூட்டி பரிசுப் பொருட்கள் வழங்குவது, புடவை, வேட்டிகள் வழங்குவது மற்றும் பணம் கொடுப்பது போன்ற நிகழ்வுகள் நடைபெற உள்ளதாக அறியப்பட்டால், அதனை உடனடியாக தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

சுபநிகழ்வுகள் என்ற பெயரில் மக்களைக் கூட்டி உணவுப் பொட்டலங்கள் மற்றும் சாப்பாடு பந்தி பரிமாறுதல் போன்றவை ஏதும் நடைபெறக் கூடாது. அவ்வாறு நடைபெற்றால் அது குறித்த தகவலை உடன் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும். திருமணம் மற்றும் சுபநிகழ்வுகள் நடைபெறும்போது அரசியல் கட்சித் தலைவர்களின் பெயர்கள் மற்றும் உருவங்கள் பொறித்த தட்டிகள், கட்அவுட்டுகள், பேனர்கள், அலங்கார வளைவுகள் ஆகியவற்றினை வைத்து வாக்குகள் சேகரித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றால் அது குறித்த தகவலை உடன் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

தங்கும் விடுதி உரிமையாளர்கள் தேர்தல் நடைபெறும் காலங்களில் உரிய அடையாள அட்டைகளை சரி பார்க்க வேண்டும். மேலும் ஆதார் (அல்லது) புகைப்பட அடையாளத்துடன் கூடிய அடையாள அட்டை நகல்களைப் பெற்ற பின்னரே தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

தேர்தல் தொடர்பாக வெளிமாநிலத்திலிருந்தும்/வெளிமாவட்டங்களிலிருந்தும் வந்து தங்கியிருப்பவர்கள் தேர்தல் பிரச்சாரம் முடிவடையும் நாளன்று உடன் வெளியேறச் செய்ய வேண்டும். குழுவாக தங்க அனுமதிக்கப்படுவர்கள் ஆபத்தை விளைவிக்கக்கூடி ய ஆயுதங்களை அல்லது பட்டாசுப் பொருட்களையோ வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது. மேற்கூறிய பொருள் தொடர்பாக தேவைப்படின் அருகாமையில் உள்ள காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்சொன்ன விதிமுறைகளின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை நேர்மையாகவும், சுமூகமாகவும் நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) நா.பூஷ்ணாதேவி, நகை அடகு தொழில் செய்வோர், திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளர்கள், மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் வங்கி பணப் பரிவர்த்தனைகளை கண்காணிப்பது குறித்தும், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளை செயல்படுத்துவது குறித்தும் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வங்கி அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று (17.03.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) நா.பூஷ்ணாதேவி, சென்னை மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், வங்கி மேலாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பாஜகNDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கடம்பத்தூர் மத்திய ஒன்றிய சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கடம்பத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் பிரகாஷ் ஞான ஒளி, கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். மாஸ்டர் குருதாஸ், ராஜசேகர், பிரசன்ன குமார், சேகர், பெருமாள், ஏ.எஸ். மணி, மாலதிவாசன், வாசு பந்தல் குமரேசன், மற்றும் திமுகவினர் கூட்டணி கட்சி நிர்வாகிகள் செஞ்சி செல்வம் சி டில்லி மணவாளன் பி.சி. ρசரவணன் சையத் சலீம், ஆர்ப்பாட்ட முடிவில் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி. ராஜன், நன்றி உரை கூறினார் மற்றும் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.